# இந்தியா-குரோஷியா இடையேயான வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் (FOC)

ஏப்ரல் 30, 2024

இந்தியாவும் குரோஷியாவும் வெளியுறவு அலுவலக ஆலோசனைகளின் (FOC) 11 வது அமர்வை 30 ஏப்ரல் 2024 அன்று புதுதில்லியில் நடத்தியது. இதில் இந்தியாவின் சார்பாக வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செயலாளர் (மேற்கு) திரு. பவன் கபூர் அவர்கள் தலைமை தாங்கினார். குரோஷியாவின் சார்பாக குரோஷியாவின் வெளியுறவு மற்றும் ஐரோப்பிய விவகார அமைச்சகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான இயக்குநர் ஜெனரல் டாக்டர். பீட்டர் மிஹாடோவ் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்த ஆலோசனைகளின் போது, வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் கடல்சார் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புதுமை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் மக்களுக்கிடையேயான உறவுகள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது உள்ளிட்ட இருதரப்பு உறவுகள் குறித்து இருதரப்பினரும் விரிவான மதிப்பாய்வை மேற்கொண்டனர். மேலும் கலாச்சார மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்களை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற பலதரப்பு அமைப்புகளில் ஒத்துழைப்பு உள்ளிட்ட சர்வதேச ஒத்துழைப்பு குறித்தும் இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு அதிகரித்து வருவதை அவர்கள் திருப்தியுடன் குறிப்பிட்டனர். மேலும் விரிவான, சமநிலையான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான FTA ஒப்பந்தத்தை விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர். பின்னர் பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இதில் பேச்சுவார்த்தைகள் நட்புரீதியான மற்றும் சுமுகமான சூழ்நிலையில் நடத்தப்பட்டன. மேலும் இரு தரப்பினரும் அடுத்த ஆலோசனை கூட்டத்தை ஜாக்ரெப்பில் பரஸ்பர வசதியான தேதியில் நடத்த ஒப்புக்கொண்டனர்.

**புது தில்லி**
**ஏப்ரல் 30, 2024**